# செய்தி மடல்

NEWS LETTER – SOND - January & February 2019

**SOND** Social Organizations Networking for Development

### SOND நிறுவனத்தைப் பற்றி:-

SOND நிறுவனமானது புதிய சமூகம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் நிறைவேற்றுப் பணிப்பளர் திரு.ச.செந்துராசா அவர்களால் 1998 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் வட கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் கிளைகளைக் கொண்டு சமூக மட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வு செயற்பாட்டிலும், சமூக அபிவிருத்தி செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்ற ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும். இந் நிறுவனம் ஆரம்பிக்கபபட்டு 20 வருடங்களை கடந்து பணிகளைத் தொடருவதற்காக 21 ஆவது வருடத்தில் காலடி பதித்துள்ளது.


### Contact Information:

Director :- Mr.S.Senthurajah
T.P no :- 021 222 6700,
077 3314262
E-mail :- senthu@eureka.lk
Address :- 18/10 Wymen road,
Nallur,
Jaffna.
&
R.K.M.Road,
Akkaraipattu.


## சிறுவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு




Country Music foundation (CMF) நிதி அனுசரணையுடன் சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சொண்ட் நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் தலைமையில் தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக CMF நிறுவனத்தின் தலைவர் Mr.Feizal Samath அவர்களும், அவரது பாரியாரும், தெல்லிப்பளை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி.கோ.சங்கீதா அவர்களும் கலந்து கொண்டனர். மேலும் CMF அமைப்பை சேர்ந்த உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



மேலும் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பளை பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 10 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 104 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், 3 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

## MRE, HN, CP திட்டங்களை முடிவுறுத்தி சமூகத்திடம் கையளிக்கும் நிகழ்வு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யுனிசெவ் அமைப்பினூடாக சொண்ட் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த மிதிவெடி அபாயக்கல்வி, சிறுவர் பாதுகாப்பு, மற்றும் சுகாதாரமும் போசாக்கும் ஆகிய செயற்திட்டங்களை முடிவுறுத்தி சமூகத்திடம் கையளிக்கும் நிகழ்வு தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வானது தெல்லிப்பளை பிரதேச செயலர் திரு.ச.சிவஸ்ரீ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேலும் சிறப்பு விருந்தினராக யுனிசெவ் நிறுவனத்தின் வடபிராந்திய தலைமை அதிகாரி திரு.ந.சுதர்மன் அவர்கள்கலந்து கொண்டார்.




அத்துடன் முடிவடையும் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கையும் எதிர் காலத்தில் சமூகத்தின் பொறுப்புக்கள் தொடர்பான முன்மொழிவையும் எமது நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்கள் முன்வைத்தார்.

அத்துடன் இந்நிகழ்வில் யாழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மற்றும் சொண்ட் நிறுவன பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திரு.திருச்சிற்றம்பலம் விஸ்வரூபன், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி திரு.சிவதாசன், மாவட்ட இணைப்பாளர் (சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவல்கள்) திரு.க.மனோகரன் ஆகியோர்களால் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன.



## தாய்மார் கழகங்களின் சிறப்பான செயற்பாட்டிற்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கல் நிகழ்வு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யுனிசெவ் அமைப்பினூடாக சொண்ட் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சுகாதாரமும் போசாக்கும் செயற்திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் சிறப்பாக இயங்கும் 19 தாய்மார் கழகங்களை தெரிவு செய்ததுடன் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு தாய்மார்கழகத்தையும் தெரிவு செய்து கழகங்களின் செயற்பாடுகளை அதிகரிப்பதற்காகவும் தாய்மார் கழக அங்கத்தவர்களை ஊக்குவிப்பதற்காகவும் 20 தாய்மார்கழகங்களுக்கும் சிறிய பணத்தொகை வழங்கப்பட்டது. மேலும் மிகவும் சிறப்பாக இயங்கும் தாய்மார்கழகமாக அளவெட்டி ஸ்ரீரங்கன் தாய்மார் கழகம் தெரிவு செய்யப்பட்டு அக்கழகத்திற்கு ஊக்குவிப்பாக மேலதிகமாக சிறு பணத்தொகை வழங்கப்பட்டது.





## சுகாதாரமும் போசாக்கும் தொடர்பான விழிப்புணர்வு பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டன

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யுனிசெவ் அமைப்பினூடாக சொண்ட் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சுகாதாரமும் போசாக்கும் செயற்திட்டத்தின் கீழ் சுகாதாரம் மற்றும் போசாக்கு தொடர்பான விழிப்புணர்வு பலகைகள் வீதிகளிலும், வைத்தியசாலைகளிலும் பொருத்தப்பட்டன.






## சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பயிற்சிப்பட்டறை

தேசிய சமாதானப் பேரவையின் (NPC) அனுசரணையுடன் SOND நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் செயற்திட்டத்தின் கீழ் அரச அதிகாரிகளுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை 21.02.2019 தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.இப் பயிற்சிப்பட்டறையினை தெல்லிப்பளை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.ரதி நகுலேஸ்வரன் அவர்கள் ஆரம்பித்து வைத்ததுடன் இப் பயிற்சிப்பட்டறையின் வளவாளராக Freelance Psychologist Counsellor செல்வி.யுடித் ஜெயரட்ணம் அவர்கள் கலந்துகொண்டார்.

இப்பயிற்சியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அதிகாரிகளும், பிரதேச சபை அதிகாரிகளும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டதுடன் NPC நிறுவன திட்ட அதிகாரி திருமதி வி. முகுந்தினி அவர்களும் SOND நிறுவன பணியாளர்களும் கலந்துகொண்டனர்.




## சமாதானப் பேரவையின் 7வது தேசிய மகாநாடு.

தேசிய சமாதானப் பேரவையானது சமாதானமும் சகவாழ்வும் என்ற தொனிப்பொருளில் செயற்திட்டம் ஒன்றை இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் செயற்படுத்தி வருகிறது அதில் அம்பாறை மாவட்டத்தில் சொண்ட் நிறுவனத்துடன் இணைந்து இத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதற்கென தெரிவு செய்யப்பட்ட 20 பங்காளிகள் தை மாதம் 28ஆம் திகதியில் பண்டாரநாயக்கா சர்வதேச மாகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந் மாநாட்டில் பங்குபற்றினார்கள். கடந்த வருடம் இத் திட்டத்தை பல்வேறு செயற்பாடுகளினூடாக மிகச் சிறப்பாக அம்பாறை மாவட்டத்தில் சொண்ட் நிறுவனம் செயற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இம் மாவட்டத்திலுள்ள மூவின மக்களோடு இணைந்து செயற்படும் செயற்திட்டங்களையும் சமாதான மாகாநாட்டையும் நடத்தி திட்டத்தின் வெற்றிக்காக பல செயற்பாடுகளை செய்திருக்கின்றது.






## கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான வடக்கின் அபிவிருத்தி அமைச்சின் கூட்டம்

கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான வடக்கின் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் எமது நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்கள் கலந்து கொண்டார். வடக்கின் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு.சிவஞான சோதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் அமைச்சு அதிகாரிகளும் இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சார்பில் எமது நிறுவனத்தின் நிறைவேற்றுப்

பணிப்பாளரும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.





## யுனிசெவ் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு இடையிலான கூட்டம்

யுனிசெவ் நிறுவனத்தின் தலைமைச் செயலக உத்தியோகத்தரும் இலங்கை நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளரும், ஆசிய பிராந்தியத்திற்குரிய பணிப்பாளரும் அண்மையில் சொண்ட் நிறுவகத்திற்கு வருகைதந்தனர். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் சகல யுனிசெவ் பங்காளி அமைப்புக்களும் அழைக்கப்பட்டு யுனிசெவ் நிறுவன கிளிநொச்சி அலுவலக அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள். இக் கூட்டத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் கடந்தகால திட்டங்களில் ஏற்பட்ட அனுபவங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள், சவால்கள், எதிர்காலத் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.





## தேசிய சமாதானப் பேரவையின் இலகுபடுத்துனர்களுக்கான பயிற்சி

தேசிய சமாதானப்பேரவையின் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க நடவடிக்கை செயற் திட்டத்தின் கீழ் சமூக அடிப்படையிலான சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான சமூக பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி தை 21-27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெற்றது. இப் பயிற்சியில் நான்கு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் கந்து கொண்டனர். அதில் சொண்ட் நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் யாழ் மாவட்டத்தில் இருந்து 8 பேர் கலந்துயொண்டனர். இதில் சொண்ட் நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர்.



## தேசிய சமாதானப் பேரவையின் நிலைமாற்று காலநீதி பயிற்சி

தேசிய சமாதானப் பேரவையின் இலங்கையின் நிரந்தர அமைதிக்கான நிலைமாற்று காலநீதி விடயத்தில் இளைஞர்களின் ஈடுபாடு எனும் செயற்திட்டத்தின் கீழ் இலங்கையின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை சேர்ந்த இளையோர்களுக்கிடையிலான கலந்துரையாடல் மற்றும் பயிற்சி பெப்ரவரி 25,26 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இதில் சொண்ட் நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர்.





















